07 10 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- நீடித்த வளர்ச்சிக்கான கருவியாக தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் உறுதிப்பாட்டிற்கு அனைவரும் வலு சேர்க்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

- இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தமிழக அரசு கூறியுள்ளது.

- மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காண த.வெ.க. அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah - Diya Chitale இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நீடித்த வளர்ச்சிக்கான கருவியாக தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச தொலைத்தொடர்பு வாரிய உறுப்பினர்களிடையே அவர் உரையாற்றினார்.

தொழில்நுட்பத்தின் பயன்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடைய வேண்டும் என்று அவர் கூறினார்.

டிஜிட்டல் சேவைகள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா அனைத்து துறைகளிலும் சாதனை படைத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக அரசு நிர்வாக தலைமை பொறுப்பை வகித்து வருவதை ஒட்டி, ஹரியானாவில் இன்று நடைபெற்ற சேவா ஜோதி யாத்திரையில் பங்கேற்று அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் உறுதிப்பாட்டிற்கு நாம் அனைவரும் வலு சேர்க்க வேண்டும் என்றும் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பில் மேலும் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் நாளை நடைபெறவுள்ள சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டத்தில் இந்த சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கூட்டத்தில் சீர்திருத்தங்கள் தொடர்பான ஐந்து அம்ச திட்டத்தை நிதியமைச்சர் முன்வைக்கவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சியில் மகளிர் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு அலுவலர்களின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மகளிர் நலனுக்கான திட்டங்களுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக கூறினார்.

மகளிர் சக்தி தான் நாட்டின் வலிமை என்ற உறுதிப்பாட்டுடன் பிரதமர் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெண்கள் பாதுகாப்பிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் திருமதி. அன்னபூர்ணா தேவி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு. தென்னரசு கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான் அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் திரு. விஜய் செயல்படுவதாக தெரிவித்தார்.

மகளிர் பாதுகாப்பிற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக திரு. தென்னரசு கூறினார்.

>>>>><<<<<

மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காண த.வெ.க. அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் கடன் சுமையையும் த.வெ.க. அரசு அதிகரித்துள்ளதாக குறை கூறினார்.

தமிழகத்தில், சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முந்தைய திமுக அரசைப் போலவே தான் த.வெ.க. அரசும் செயல்படுவதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் குற்றச் சம்பவங்களும், போதைப்பொருள் புழக்கமும் அதிகரித்துள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் குழந்தைகளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமைகள் நடைபெறாமல் இருப்பதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை திருவொற்றியூரில், ஆறு வயது சிறுமிக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு காரணமானவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி, அதிகபட்ச தண்டனையான தூக்கு தண்டனையை பெற்றுத்தர காவல்துறையும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - துரை 22 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம் உதகையில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இதன் காரணமாக, மலைப்பகுதி முழுவதும் நீல நிற கம்பளம் போர்த்தியது போல் காட்சி அளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – சரவணன் - 43 Sec. )*

>>>>><<<<<

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே மூன்று மாதங்களாக கிராம மக்களை அச்சுறுத்தி வந்த சிறுத்தையை வனத்துறையினர் கூண்டு வைத்து பிடித்தனர்.

பிடிபட்ட சிறுத்தையை வனத்துறையினர் பாதுகாப்பாக வனப்பகுதியில் விட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

*மாவட்டச் செய்திகள்*

கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் வசித்துவரும் பழங்குடியின மக்களுக்காக கட்டப்பட்டுவரும் வீடுகளை மாநில அமைச்சர் திரு வன்னி அரசு இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

விருதுநகர் ரயில் நிலையம் குப்பையில்லா ரயில் நிலையமாக அறிவிக்கப்பட்டதையடுத்து, தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், அந்த ரயில் நிலையத்தில் மாணவர்கள் தூய்மைப்பணியில் ஈடுபட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

>>>>><<<<<

விழுப்புரத்தில் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான வளைகாப்பு நிகழ்ச்சியை ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் தொடங்கி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.

>>>>><<<<<

சேலம் மாநகர காவல்துறை ஆணையராக இன்று பொறுப்பேற்றுக் கொண்ட திரு பாபு, சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

தேனி மாவட்டம், கோட்டூரில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சமூக பராமரிப்பு சேவை மையத்தை ஆட்சியர் திரு. வைத்தியநாதன் இன்று திறந்து வைத்தார்.

>>>>><<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah - Diya Chitale இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-9, 13-11, 11-3 என்ற செட்கணக்கில் Romania-வின் Eduard Ionescu - Pernadepte Szocs இணையை வென்றது.

>>>>><<<<<

Arctic ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tharun Mannepalli காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 21-14 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் Magnas Johannesen-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Krishna Prasad Garaga - Pruthvi Krishnamoorthy Roy இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>END<<<<<